# வானவில் வாக்குறுதி

*தொடர்ந்து கனமழை பெய்து பார்த்திருக்கிறாயா? வெளியே சென்று விளையாட முடியாமல் வீட்டுக்குள்ளேயே விளையாடியதால் கஷ்டமாக இருந்ததுண்டா? ஒரு வருடத்திற்கு மேலாகப் பேழைக்குள்ளேயே இருந்த நோவாவின் குடும்பத்தாருக்கு எப்படி இருந்திருக்கும்?*

பேழைக்குள் தேவன் சொல்லிய இடங்களில் தங்கள் கூடாரங்களை அமைத்து ஒரு வருடத்திற்கும் மேலாகத் தங்கியிருந்தனர். பின்னர் தேவன் கட்டளையிட்டதால் ஒரு வருடத்திற்கு மேலாகப் பேழைக்குள்ளேயே இருந்த நோவாவின் குடும்பத்தினர் இப்போது வெளியே வந்தனர். அருமையான, சுத்தமான காற்றைச் சுவாசித்தனர். சூரிய ஒளி அவர்கள் மேல் பட்டபோது மகிழ்ந்தார்கள். அந்தப் புதிய பூமி வித்தியாசமாகவும் அமைதியாகவும் காணப்பட்டது. அந்தப் புதிய பூமியில் மனிதர்களாக அவர்கள் எட்டுப்பேர் மாத்திரமே இருந்தார்கள்.



மிருகங்கள் அங்குமிங்கும் தேவன் சொன்ன இடங்களுக்கு ஓடிச்சென்றன. அவை ஒவ்வொன்றும் எழுப்பிய குரல் இனிமையாகவும் மகிழ்ச்சியைத் தருவதாகவும் இருந்தது. பேழையிலிருந்து விடுதலையான மகிழ்ச்சியில் அவை துள்ளிக் குதித்தவாறே ஓடின.

இப்போது நோவா செய்த முதல்வேலை என்னவெனில் உடனேயே ஒரு பலிபீடம் கட்டினார்; சுத்தமான சகல மிருகங்களிலும், சகல பறவைகளிலும் சிலவற்றை தெரிந்துகொண்டார். அவற்றை தேவனுக்குப் பலியிட்டார். தேவன் அந்தப் பலியை ஏற்றுக்கொண்டு மகிழ்ந்தார். அது தேவனுக்குச் சுகந்தவாசனையாய் இருந்தது. தேவன் நோவாவின் குடும்பத்தாரை ஆசீர்வதித்தார், ''நீங்கள் பலுகிப் பெருகி பூமியிலே திரளாய் வர்த்தித்து விர்த்தியாகுங்கள்'' என்று சொன்னார் தேவன். ஆதி 9:7

மேலும், தேவன் நோவாவுக்கும் அவர் சந்ததிக்கும் மற்

## மனன வசனம்

**எல்லா மாம்சஜீவன்களையும் அழிக்க இனி ஜலமானது பிரளயமாய்ப் பெருகாதபடிக்கு எனக்கும் உங்களுக்கும் மாம்சமான சகல ஜீவஜந்துக்களுக்கும் உண்டான என் உடன்படிக்கையை நினைவுகூருவேன். ஆதியாகமம் 9:15.**

றொரு வாக்குறுதியையும் கொடுத்தார். அவர்களுடன் தேவன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். ‘‘நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். அப்பொழுது எல்லா மாம்ச ஜீவன்களையும் அழிக்க இனி ஜலமானது பிரளயமாய்ப் பெருகாதபடிக்கு எனக்கும் உங்களுக்கும் மாம்சமான சகல ஜீவஜந்துக்களுக்கும் உண்டான என் உடன்படிக்கையை நினைவு கூருவேன்’’ என்றார் தேவன். ஆதி 9:13,15

ஏனென்றால், வெள்ளப் பெருக்குக்கு முன்னர் பூமியில் மழை பெய்ததே இல்லை. ‘இனிமேல் பூமியுள்ள நாளெல்லாம் விதைப்பும் அறுப்பும் சீதளமும், உஷ்ணமும் கோடைக்காலமும் மழைக்காலமும் பகலும் இரவும் ஒழியாது என தேவன் உள்ளத்திலே சொன்னார்’ என்று வேதம் சொல்லுகிறது.

எனவே, மழைபெய்வதற்காக வானிலே கார்மேகங்கள் ஒன்றாகத் திரளும்போது ஜலப்பிரளயம் வரப்போகிறதோ என மனிதர் பயப்படக்கூடும் என்பதால்,தேவன் தம் உடன்படிக்கைக்கு ஓர் உண்மையான சாட்சியாகத் தமது ‘வானவில்லை’, தேவன் வானில் வைத்தார். வானில் அந்த வில் தோன்றும்போது நாமும் தேவனின் உடன்படிக்கையை நினைத்து ஆறுதல் பெறமுடியும். தேவனும் நம்மை நினைவுகூருவார்.

அந்த வானவில் மிகவும் அழகானது. அதில் அநேக வண்ணங்களை நாம் பார்க்கமுடியும். நோவாவின் குடும்பத்தை மட்டுமல்ல, நம் குடும்பங்களையும் தேவன் ஆசீர்வதித்துள்ளார். எனவே நாமும் கூட, பிறருக்கும் நமது குடும்பத்திற்கும் சபைக்கும் பள்ளிக்கும் என்றும் ஆசீர்வாதமாக விளங்கவேண்டும்.

வெள்ளத்தின்போது பேழைக்குள் வைத்து நோவாவின் குடும்பத்தைக் காப்பாற்றினார் தேவன். பேழையை



## செய்தி

**தேவன் பாதுகாப்பதால் தேவனுடைய பிள்ளைகள் சந்தோஷமாயிருப்பார்கள்.**

விட்டு வெளியே வந்த பின்னரும் அவர்களைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். வானவில் வாக்குறுதி, உடன்படிக்கை அவர்களுக்கு மட்டுமல்ல, நமக்கும்தான்.

நன்றி மறவாத நோவா தேவனுக்குப் பலிசெலுத்தி தேவனைத் துதித்தார். நாமும் அவ்வாறே தேவனுக்கு நன்றி செலுத்துகிறவர்களாக இருக்கவேண்டும். அதுவும் நோவா முதலில் தேவனுக்கென்று பலிபீடம்கட்டிப் பலியிட்டார். நமது அன்றாட வாழ்விலும் தேவனுக்கே நாம் முதலிடம் தர வேண்டும்.

என் பிரியமே!வானவில் தேவஅன்பை நமக்கு வெளிப்படுத்துகிறது. வானவில் வாக்குறுதிக்காக தேவனுக்கு நன்றி சொல். வானவில் தோன்றும் போது, உன் நண்பரிடம் நீ வேதத்தில் படித்ததைச் சொல்.

### செய்முறை

கீழே கொடுக்கப்பட்டுள்ள வானவில்லுக்கு அழகாக வண்ணம்தீட்டு. கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விக்கான பதிலைப் பாடத்திலிருந்து எடுத்து எழுது.



1. வானவில்லின் மூலம் என்ன வாக்குறுதியை தேவன் தருகிறார்?

_______________________________

2. தேவன்முதலில் யாருடன் வானவில்மூலம் உடன்படிக்கை செய்தார்?

_______________________________